<u>கொடைக்கானல் நகராட்சி</u>

2020ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30ஆம் நாள் (30.09.2020) புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கொடைக்கானல் நகராட்சி நகர்மன்றக் கூடத்தில் தனி அலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.

முன்னிலை: த. நாராயணன், பி.எஸ்.சி., எம்.பி.ஏ.,
தனி அலுவலர்.

1) கொடைக்கானல் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் துப்புரவுப்பணிக்கு குப்பைகள் அகற்றப் பயன்படுத்தப்பட்டு வரும் TN 57 W 4937 டிப்பர் வாகனத்திற்கு தகுதிச் சான்று பெறப்பட வேண்டியுள்ளது. இவ்வாகனத்தின் தகுதிச் சான்று கடந்த ஏப்ரல்–2020 மாதத்துடன் முடிவடைந்து விட்டது. தற்சமயம் கொரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்புக்காக அரசால் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு தளர்வு செய்யப்பட்டுள்ளதால், சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரித்து கொண்டே வருவதாலும், மேலும் பருவமழை தொடங்கி உள்ளதாலும் நகர் பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை உடனுக்குடன் அகற்றி துப்புரவுப் பணி சுணக்கமின்றி நடைபெற்று நகரின் தூய்மை பணியினை பராமரிக்க வேண்டியுள்ளதால் மேற்கண்ட வாகனம் TN 57 W 4937 வாகனத்தின் பழுதுகளை அரசு அங்கீகாரம் பெற்ற பணி மனைகளில் தகுதி சான்றுக்கான பழுது பணிகள் மேற்கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ.2,00,000/–ஐ (ரூபாய் இரண்டு லட்சம் மட்டும்) இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **892, நாள். 30.09.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

2) கொடைக்கானல் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவுப் பணிக்கு குப்பைகள் அகற்றப் பயன்படுத்தப்பட்டு வரும் TN 57 BU 3416 டிப்பர் லாரியின் தகுதிச் சான்று பெறப்பட வேண்டியுள்ளது. இவ்வாகனத்தின் தகுதிச் சான்று கடந்த ஏப்ரல்–2020 மாதத்துடன் முடிவடைந்து விட்டது. தற்சமயம் கொரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்புக்காக அரசால் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு தளர்வு செய்யப்பட்டுள்ளதால், சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரித்து கொண்டே வருவதாலும், மேலும் பருவமழை தொடங்கி உள்ளதாலும் நகர் பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை உடனுக்குடன் அகற்றி துப்புரவுப் பணி சுணக்கமின்றி நடைபெற்று நகரின் தூய்மை பணியினை பராமரிக்க வேண்டியுள்ளதால் மேற்கண்ட வாகனம் TN 57 BU 3416 வாகனத்தின் பழுதுகளை அரசு அங்கீகாரம் பெற்ற பணி மனைகளில் தகுதி சான்றுக்கான பழுது பணிகள் மேற்கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.2,00,000/–ஐ (ரூபாய் இரண்டு லட்சம் மட்டும்) இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **893, நாள். 30.09.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

3) கொடைக்கானல் நகராட்சி பொது சுகாதார பிரிவு குப்பை லாரி TN 57 AU 3862 ன் பழுது பணிகளை மேற்கொள்வதற்கு பார்வை.1 ல் காணும் இவ்வலுவலக வேலை உத்திரவில், A.S.R. பாடி ஒர்க்ஸ், மதுரை நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டது. பார்வை 2 ல் காணும் . A.S.R. பாடி ஒர்க்ஸ், மதுரை அவர்களின் கடிதம் நாள். 30.7.2020ல் மேற்கண்ட வாகனத்தின் இஞ்சின் பழுது உள்ளதால் கூடுதலாக இஞ்சின் பழுது சரி செய்வதற்கு 90202/– ஆகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே பழுது பணிக்காக நகர்மன்றத் தீர்மானம் எண். 758 நாள். 28.2.2020 ல் ரூ. 97772/– க்கு மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. தற்போது இஞ்சின் பழுது மேற்கொள்ள ரூ. 90202/– ஆகும் என தெரிவிக்கப்பட்டுள்ளதால், இவ்வாகனத்தின் இஞ்சின் பழுதினையும் சேர்த்து சரி செய்திட வேண்டியுள்ளதால் மன்றத்தின் திருத்திய அனுமதி வேண்டப்படுகிறது. இச்செலவினத்தினை பொது நிதியின் மூலம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

அலுவலக குறிப்பு. 1. அனுமதிக்கலாம்.

2. பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **894, நாள். 30.09.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

4) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் இனங்களுக்கு 2020–21 முதல் 2022–23ஆம் ஆண்டு முடிய மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்குவதற்கு பொது ஏலம் மற்றும் பொது ஒப்பந்தப்புள்ளிகள் 17.09.2020ஆம் தேதி கோரப்பட்டது.

1. புரூட்டன் வளாகத்தில் வாகன நிறுத்தக் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
2. பிரையண்ட் பார்க் வளாகத்தில் வாகன நிறுத்தக் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.

மேற்கண்ட குத்தகை இனத்திற்கு பொது ஏலம் / பொது ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்வதற்கு ஒருவரும் முன்வரவில்லை.

நகராட்சி வருவாயினை பெருக்கும் நோக்கில் 21.09.2020 இன்று நடைபெற்ற ஏலம் / ஒப்பந்தக்குழு கூட்டத்தில், 05.03.2020 அன்று நடைபெற்ற பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்ட திரு.P.சுரேஷ், த/பெ. பெருமாள் தேவர், திண்டுக்கல் என்பவர் ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்தபட்ச தொகையாக ரூ.20,55,000 (ரூபாய் இருபது லட்சத்து ஐம்பத்தி ஐந்தாயிரம் மட்டும்) கோரியுள்ளதை ஏற்று குத்தகை உரிமம் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

05.03.2020 அன்று பொது ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்களின் விபரம்.

| இனம் | குத்தகைதாரர் விபரம் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| பிரையண்ட் பார்க் வளாக வாகன நிறுத்த கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 1. திரு. P.சுரேஷ், த/பெ. பெருமாள் தேவர், திண்டுக்கல். | ரூ.20,55,000/– |
| | 2. திரு.K.சேக் அப்துல்லா, த/பெ. காதர்மைதீன், ஆனந்தகிரி 2வது தெரு, கொடைக்கானல். | ரூ.12,75,000/– |

மேற்கண்ட குத்தகை இனத்திற்கு திரு. P.சுரேஷ், த/பெ. பெருமாள் தேவர் , திண்டுக்கல் என்பவர் ரூ.20,55,000/–க்கு அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை கோரியுள்ளார். மேற்கண்ட குத்தகை இனத்தை திரு. P.சுரேஷ், த/பெ. பெருமாள் தேவர் , திண்டுக்கல் என்பவருக்கு குத்தகை உரிமம் வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 21.09.2020 அன்று நடைபெற்ற பொது ஏலம் / ஒப்பந்தக்குழு கூட்டத்தில், 05.03.2020 அன்று நடைபெற்ற பொது ஒப்பந்தப்புள்ளியில் திரு.P.சுரேஷ், என்பவரின் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.20,55,000/–ஐ ஏற்று தீர்மானிக்கப்பட்டதை மன்றம் ஏற்று குத்தகை நிபந்தனைகளுக்கு உட்பட்டு குத்தகை உரிமம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **895, நாள். 30.09.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

5) கொடைக்கானல் நகராட்சிக்குச் சொந்தமான குத்தகை இனங்களை 2020–2021 முதல் 2022–2023 முடிய மூன்றாண்டு காலத்திற்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமம் குறித்த பொது ஏலம் மற்றும் திறந்த ஒப்பந்தப்புள்ளிக்கான அறிவிப்பினை விளம்பரம் செய்யக் கோரி திண்டுக்கல் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு துறை மூலம் விளம்பரம் செய்ய கேட்டுக் கொள்ளப்பட்டது. அதன்படி அறிவிப்பு மக்கள் குரல் நாளிதழில் 02.09.2020ம் தேதில் விளம்பரம் செய்யப்பட்டது. Newsmen Associates Limited, Madurai நிறுவனத்திடமிருந்து மக்கள் குரல் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கான விளம்பரக் கட்டணம் ரூ.26250/–ற்கு (ரூபாய் இருபத்தி ஆறாயிரத்து இருநூற்றி ஐம்பது மட்டும்) பட்டியல் வரப்பெற்றுள்ளது. (பட்டியல் எண்.MDUMAB202100226, நாள்.02.09.2020). எனவே, விளம்பரக் கட்டணம் ரூ.26250/–ஐ Newsmen Associates Limited, Madurai நிறுவனம் அவர்களுக்கு இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.6730/2016/அ3)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **896, நாள். 30.09.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

6) நகராட்சிக்குச சொந்தமான புரூட்டன் வளாகத்தில் உள்ள ஸ்கேட்டிங் ஹால் மற்றும் டேசிங் கார் அமைந்திருந்த இடம் உரிமத்திற்கு 17.09.2020ல் நடைபெற்ற பொது ஏலத்தில் திரு.சந்தீப் அஜேந்திரா, 124ஏ காலனி, ஜோதிநகர், பொள்ளாச்சி என்பவர் ஏலத்தில் இறுதியாக ரூ.8,10,000/– கேள்வி எழுப்பியுள்ளார். இதே ஏலத்தில் கலந்து கொண்ட திரு.எம்.பாலகுமரன், த/பெ. முருகன், 236, இமயம் காலனி 2வது தெரு, அண்ணாநகர் மேற்கு, அம்பத்தூர், திருவள்ளூர் மாவட்டம் என்பவர் ஏலத்தில் இறுதியாக ரூ.8,25,000/– உயர்ந்தபட்ச கேள்வி எழுப்பியுள்ளார். இவ்வினத்திற்கு கடந்த 13 முறை நடந்த பொது ஏலம் மற்றும் பொது ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள எவரும் முன்வரவில்லை. இது 14வது அழைப்பாகும். கடந்த முறை ரூ.6,06,500/– ஏலம் கோரப்பட்டுள்ளதை காட்டிலும் ரூ.2,18,500/–கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரி குத்தகை தொகை ரூ.5,96,791/–ஐ காட்டிலும் ரூ.2,28,209/– கூடுதலான தொகைக்கு கோரப்பட்டுள்ளதால் நகராட்சிக்கு அதிகளவில் வருவாய் ஈட்டும் நோக்கில் மேற்கண்ட உயர்ந்த பட்ச ஏலத்தொகை ரூ.8,25,000/–ஐ ஒப்படைக்க உறுதி செய்து ஏலம் மற்றும் ஒப்பந்தக்குழுவில் தீர்மானிக்கப்பட்டதன்படி திரு.எம்.பாலகுமரன், த/பெ. முருகன், என்பவருக்கு குத்தகை உரிமம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : திரு.எம்.பாலகுமரன், த/பெ. முருகன், 236, இமயம் காலனி 2வது தெரு, அண்ணாநகர் மேற்கு, அம்பத்தூர், திருவள்ளூர் மாவட்டம் என்பவரின் உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.8,25,000/–ஐ ஏற்று குத்தகை உரிமம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.4413/2014/அ3)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **897, நாள். 30.09.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

7) இந்நகராட்சியில் பணிபுரியும் பொது சுகாதாரப் பிரிவு தூய்மை பணியாளர்கள் மற்றும் அனைத்து பிரிவு ஓட்டுநர்கள், அலுவலக உதவியாளர்கள் பணியாளர்களில் தகுதி வாய்ந்த நபர்களுக்கு 2020–2021ம் ஆண்டிற்கான சீருடைகள் மற்றும் தையற் கூலி வழங்கப்பட வேண்டியுள்ளது. மேற்கண்ட சீருடைகள் வாங்க அரசு நிறுவனமான கோ–ஆப் டெக்ஸ் கைத்தறி நிறுவனம் மூலம் சீருடைகள் வாங்கவும் அதற்கான தையற்கூலி வழங்கவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,00,000/– (ரூபாய் மூன்று லட்சம் மட்டும்)க்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியாளர்கள் விபரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | ஓட்டுநர்கள் | 4 | – | 4 |
| 2 | துப்புரவுப் பணி மேற்பார்வையாளர்கள் | 1 | 2 | 3 |
| 3 | தூய்மை பணியாளர்கள் | 53 | 4 | 57 |
| 4 | மகப்பேறு ஆயா | – | 1 | 1 |
| 5 | சமையலருடன் காவலர் | 1 | – | 1 |
| 6 | அலுவலக உதவியாளர்கள் | 2 | 3 | 5 |
| 7 | சங்கிலியாட்கள் | 2 | – | 2 |

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.99/2006/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **898, நாள். 30.09.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

8) இந்நகராட்சியால் வசூலிக்கப்பட வேண்டிய சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம் மற்றும் வரியற்ற இனங்களின் வசூலினை பொது மக்கள் செலுத்தும் வகையில் கொடைக்கானல் நகராட்சி பகுதியிலுள்ள 24 வார்டுகளிலும் முழுவதும் ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் செய்ய நகர்மன்ற தீர்மானம் எண்.728, நாள்.26.12.2019ன்படி உத்தேச செலவு ரூ.50,000/–க்கும் உள்ளூர் விலைப்புள்ளி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட விபரத்திற்கு 3.01.2020 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விபரம் கீழ்க்காணும் விபரத்திற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் மற்றும் விலாசம் | வாகனத்தில் ஒலி பெருக்கி அமைத்து நகர் முழுவதும் விளம்பரம் செய்ய ஒரு நாள் ஒன்றுக்கு ரூபாய். |
|---|---|---|
| 1. | S.V.ராஜன், ராஜன் சவுண்ட் சர்வீஸ், அன்னாராமசாமி நகர், நாயுடுபுரம், கொடைக்கானல். | ரூ.3150/– |
| 2. | S.A.ஜெசிந்திரன், இசைராணி ஆடியோஸ், பி.சி.கே.காம்ளக்ஸ், நாயுடுபுரம், கொடைக்கானல். | ரூ.2850/– |
| 3. | J.M.ஆடியோஸ், செண்பகனூர், கொடைக்கானல். | ரூ.3050/– |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில், திரு.S.A. ஜெசிந்திரன், இசைராணி ஆடியோஸ்,நாயுடுபுரம், கொடைக்கானல் அவர்களின் குறைந்த விலை விகிதத்தினை ஏற்று அதற்கான பணிஉத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) நகராட்சியின் வசூல் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.571/2016/அ1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **899, நாள். 30.09.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

ஒம்/–த.நாராயணன்,
தனி அலுவலர்,
கொடைக்கானல் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி.